# இலங்கையின் 2019 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரான IRI மற்றும் NDI அமைப்புக்களின் இணைந்த தேர்தல் தொடர்பிலான மதிப்பீடு

**ஒக்டோபர் 9, 2019**

**சுருக்கம்**

இக்கூற்றானது சர்வதேச குடியரசு நிலையம் (IRI) மற்றும் தேசிய ஜனநாயக நிலையம் (NDI) என்பன ஏற்பாடு செய்த தேர்தலுக்கு முன்னரான இணைந்த சர்வதேச தூதுக்குழவினால் வழங்கப்படுகின்றது. இந்தத் தூதுக்குழவின் நோக்கங்களாக இலங்கையில் எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் தேர்தல் ஆயத்தங்களை சரியாகவும் பக்கச்சார்பின்றியும் மீளாய்வு செய்தல் அத்துடன் வெளிப்படையான, பாதுகாப்பான மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்த அத்துடன் தொடர் செயன்முறையில் மக்களின் நம்பிக்கையைக் கட்டி எழுப்புதல் போன்ற தேர்தலை மேம்படுத்த உதவும் பரிந்துரைகளை வழங்குதல் என்பன காணப்படுகின்றன. இக்கூற்றில் கடந்த செப்டம்பர் மாத முதல் அரைவாசிக் காலப்பகுதியில் NDI அமைப்பின் பால்நிலை, சமாதானம் மற்றும் முரண்பாடு அத்துடன் குடிமக்கள் பங்கேற்பு நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்ட உள்வாங்கல் மதிப்பீட்டின் தகவல்களும் உள்ளடங்குகின்றன. கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் பல்வகைத்தன்மை கொண்ட பங்குதாரர்களுடனான சந்திப்புகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட இந்த உள்வாங்கல் மதிப்பீட்டில் தேர்தல் தொடர் செயன்முறையில் பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களின் பங்கேற்புக்கான வாய்ப்புகள் மற்றும் தடைகள் என்பன பரிசீலிக்கப்பட்டன.

IRI-NDI தூதுக்குழவில் பின்வரும் உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர்: உயர்ஸ்தானிகர் கார்ல் இன்டர்பேர்த், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முன்னாள் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர்; காரா பூ, முன்னாள் இராஜாங்க பிரதி உதவிச் செயலாளர் அரசியல் மற்றும் இராணுவ விவகாரங்கள்; மரியா சின் அப்துல்லா, மலேசிய பாராளுமன்ற உறுப்பினர்; S.Y. குறைஷி முன்னாள் இந்திய பிரதம தேர்தல் ஆணையாளர்; மன்பிரீத் சிங் ஆனந், NDI அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கான பிராந்தியப் பணிப்பாளர்; அத்துடன் ஸ்கொட் மாஸ்டிக், IRI அமைப்பின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பிரதித் தலைவர்.

கடந்த செப்டம்பர் 30 தொடக்கம் ஒக்டோபர் 4 2019 வரை தூதுக்குழு அரசியல் வரிசையில் காணப்படும் கட்சிப் பிரதிநிதிகள், தேர்தல் ஆணைக்குழு, பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், குடிமக்கள் தேர்தல் கண்காணிப்பாளர் குழுக்களின் தலைவர்கள் உள்ளிட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள், பெண் அரசியல் செயற்பாட்டாளர்கள், ஊடகங்கள் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச மற்றும் இராஜதந்திர சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்தது. IRI மற்றும் NDI என்பன இப்பணியை சர்வதேச தேர்தல் கண்காணிப்பு கொள்கைகள் பிரகடனம்[1] என்பதற்கு அமைவாக மேற்கொண்டதோடு இலங்கையின் மக்களே தமது தேர்தல்களின் நம்பகத்தன்மை மற்றும் சட்டரீதியான தன்மை என்பனவற்றை மற்றும் தமது நாட்டின் ஜனநாயக அபிவிருத்தி என்பனவற்றை தீர்மானிப்பர் என ஏற்றுக் கொள்கின்றது. எனவே

---

[1] Available at https://www.ndi.org/DoP

தூதுக்குழுவானது இந்தத் தேர்தலுக்கு முன்னரான கூற்றினை இலங்கையின் ஜனநாயக அமைப்புகள் மற்றும் தொடர் செயன்முறைகள் என்பவற்றுக்கு ஆதரவளிக்கும் நோக்கிலேயே வழங்குகின்றது. தூதுக்குழுவானது தான் சந்தித்த மற்றும் தூதுக்குழுவுடன் தமது நோக்குகளை சுதந்திரமாகப் பகிரந்துகொண்ட அனைவருக்கும் ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இலங்கை நாடு 2015 ஆம் ஆண்டைப் போன்று முக்கியத்துவம் மிக்க தேசிய தேர்தல் ஒன்றினை எதிர் நோக்கியுள்ளது, இத்தேர்தலானது நாட்டின் ஜனநாயக அமைப்புகளின் எதிர்காலப் பாதையினை தீர்மானிக்கக்கூடும். இத்தேர்தலானது நாட்டுக்கு பன்மைத்துவம் மற்றும் சமாதானம் மிக்க சகவாழ்வு என்பவற்றின் மீதான கடப்பாட்டினை மீள்வலுப்படுத்துவதற்கான வாய்ப்பு ஒன்றினை வழங்குகின்றது. கடந்த ஏப்ரல் 2019 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இலங்கை பல ஆண்டுகளாக வேண்டி நிற்கும் ஒற்றுமையை சீர்குலைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. நாட்டின் அடிப்படை சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றுக்கு இன நல்லுறவு முக்கியமானதாகும், இந்நல்லுறவு தேர்தல் காலங்களின் போது பாதிப்புறும் நிலை கொண்டதாகக் காணப்படலாம். கடந்த ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் ஊடாக சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாணைக்குழுவானது தூதுக்குழவினர் சந்தித்த அனைத்துத் தரப்பினரதும் நம்பிக்கை மற்றும் அங்கீகாரத்தைப் பெருமளவில் பெற்றிருந்தது. எவ்வாறாயினும் இலங்கையானது இத்தேர்தலில் முக்கியத்துவம் மிக்க சவால்களை எதிர்நோக்குகின்றது:

- இத்தேர்தலில் நாட்டின் மிகவும் முக்கியமான தலைவர்களான ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் போட்டியிடாததன் காரணமாக இத்தேர்தல் மிகவும் திறந்த தளத்தினைக் கொண்டதாக அமையவுள்ளது என இலங்கையின் தேர்தல் பங்குதாரர்கள் எதிர்பார்க்கின்றனர். இது ஜனாதிபதிப் பதவியைப் பெறுவதற்கான திடமான பெரும்பான்மையினை எந்த ஒரு வேட்பாளரும் முதலாம் சுற்று வாக்கெண்ணுதலில் பெறாமல் இருக்கும் சாத்தியத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, தேர்தல் ஆணைக்குழு இலங்கையின் விருப்பு வாக்கு முறைமையின்[2] கீழ் வாக்காளர்களின் இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பத் தெரிவுகளை கருத்தில் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம்.
- பக்கச்சார்புமிக்க தனியார் ஊடக நிறுவனங்கள் தீங்குவிளைவிக்கவல்ல ஊடகச் சூழலை மேலும் மோசமாக்குகின்றன.
- சமூக வலைதளம் தேர்தல் தொடர்பான தகவல்களை வழங்கும் வழிமுறையாக மாறும் சாத்தியம் கொண்டதாகக் காணப்படுகின்றது. எனினும் இதன் துஷ்பிரயோகமானது வேட்பாளர்கள் அல்லது சிறுபான்மைக் குழுக்களுக்கு எதிரான தவறான தகவல்கள், பிழையான தகவல்கள் மற்றும் வெறுப்புப்பேச்சு என்பனவற்றில் பங்களிப்பு வழங்குகின்றது.
- பொதுவாக தேர்தலுக்கு முன்னரான வன்முறைச் சாத்தியம் தொடர்பில் மிகவும் குறைந்த மட்டத்திலான கரிசனை காணப்பட்டது. எவ்வாறாயினும், இந்தப் பாதுகாப்பு மதிப்பீடானது தேர்தலின் இறுதி முடிவு தொடர்பான நிச்சயமற்ற தன்மையின் காரணமாக மாற்றமடைய முடியும்.
- பிரச்சார நிதி தொடர்பான சட்டங்கள் காணப்படாமை தேர்தலின் ஒட்டுமொத்த வெளிப்படைத் தன்மையினைக் குறைப்பதுடன் கேள்விக்குட்படுத்தப்படக்கூடிய நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கருத்து வேற்றுமை என்பவற்றை தெளிவற்றதாக ஆக்குகின்றது. இந்நிலை வெளிநாட்டு மூலங்கள் உள்ளிட்ட சட்டவிரோதமான நிதிவகைகள் மற்றும் அரச வளங்களின் துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு வழிகோலுகின்றது.
- பெண்கள் மற்றும் ஏனைய ஓரங்கட்டப்பட்ட குழுக்கள்; பிரச்சாரத்துக்கான அதிக செலவு, தொடர்ச்சியான வன்முறை மற்றும் பாகுபாடு, நேரடியாக மற்றும் இணையவழியாக,

[2] Under Sri Lanka's preferential voting system, each eligible voter can select up to three candidates on the ballot, prioritized by order of preference. During the first ballot count, only first-preference votes are considered. If none of the candidates receive more than 50 percent of first-preference votes, the Election Commission conducts a second count to allocate second- and third-preference votes to the top two candidates from the first count. Whichever candidate receives more votes after the second count is declared the winner.

வினைத்திறன் மிக்க தலைமைத்துவத்தை வழங்கும் அவர்களது இயலுமைகளில் வேரூன்றிக் காணப்படும் இகழ்ச்சி மற்றும் முற்கற்பிதங்கள் போன்ற அரசியல் பங்கேற்புக்கான தடைகளை தொடர்ச்சியாக எதிர்கொள்கின்றனர்.

- குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான இலங்கை வாக்காளர்கள் வாக்களிக்க முடியாத நிலையில் உள்ளனர். இதில் வெளிநாடுகளில் உள்ள ஏறத்தாழ இரண்டு மில்லியன் இலங்கையர்கள் உள்ளடங்குகின்றனர். இதற்கு மேலதிகமாக, தேர்தல் தினத்தன்று 18 வயதை அடைபவர்கள் என மதிப்பிடப்பட்டுள்ள 180,000 இளைஞர்கள் இன்னும் வாக்காளர் இடாப்பில் உள்ளடக்கப்படவில்லை.

மேற்குறிப்பிடப்பட்ட கண்டறிதல்களின் பிரகாரம், தூதுக்குழுவானது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல்கள் என்பவற்றுக்காக தேர்தல் ஆணைக்குழு, அரசாங்கம், அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய தேர்தல் பங்குதாரர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய பரிந்துரைகளை வழங்குகின்றது. முக்கியமாக பரிந்துரைகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன:

- **ஊடகப் பக்கச்சார்பு:** தேர்தல் ஆணைக்குழவானது ஊடகத்தை – அச்சு, ஒளிபரப்பு மற்றும் சமூக – மற்றும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் பிரச்சாரத்தின் பொழுது பயன்படுத்தும் மேம்படுத்தும் ஆவணங்களை பொறுப்புமிக்க வகையில் மற்றும் ஒழுக்கத்துடன் பயன்படுத்துவதற்கான உறுதியான வழிகாட்டல்களை பிரசித்தப்படுத்த வேண்டும். அரச மற்றும் தனியார் துறை ஊடகங்கள் இவ்வழிகாட்டல்களை, விசேடமாக அனைத்து வேட்பாளர்களுக்கும் பக்கச் சார்பற்ற சமத்துவம் மிக்க ஊடகப் பிரசித்தத்தை வழங்குவது தொடர்பில், பின்பற்றியொழுக வேண்டும். ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து, பாராளுமன்றம் தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல்களுக்கான அணுகல் என்பனவற்றைப் பாதுகாத்துக் கொண்டு தனியார் ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் வெறுப்புப் பேச்சு, தவறான மற்றும் பிழையான தகவல்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டவாக்கம் ஒன்றினைக் கருத்தில் கொள்ள வேண்டும்.
- **பிரச்சார நிதி:** தேர்தல் தொடர் செயன்முறையின் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல் மற்றும் குடிமக்களை அதிக தகவலறிந்த தெரிவுகளை மேற்கொள்ள வலுப்படுத்தல் என்பவற்றுக்காக ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் தாம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தல்களை பிரசித்தமாக்க வேண்டும். நீண்ட கால அடிப்படையில் பாராளுமன்றம் பிரச்சார நிதி மட்டுப்படுத்தல்கள், அறிக்கையிடல் மற்றும் வெளிநாட்டு பங்களிப்பு தொடர்பான பிரச்சனைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.
- **வாக்காளர் அறிவு:** தேர்தல் ஆணைக்குழு, அரசியல் கட்சிகள், ஊடகங்கள் மற்றும் சிவில் சமூகம் என்பன வாக்காளர் அறிவு முன்னெடுப்புகளை, விசேடமாக விருப்பு வாக்கு முறை மற்றும் வாக்குச் சீட்டு குறியிடல் என்பவை தொடர்பில், அதிகரிக்க வேண்டும். பெண்கள், கிராமப்புறங்களில் வாழும் இளைஞர்கள் மற்றும் குடிமக்களை நோக்கி இலக்கு வைக்கப்பட்ட வாக்காளர் அறிவுப் பிரச்சாரம் அதிகரிக்கப்பட வேணடும். இவ்வாக்காளர் அறிவானது ஒவ்வொரு குடிமகனினதும் வாக்கின் முக்கியத்துவம், தேர்தல் பிணக்குத் தீர்த்தல் பொறிமுறைகளுக்கான அணுகல் மற்றும் இயலாமை கொண்ட நபர்களுக்கான அணுகல் மற்றும் உள்ளடக்கல் போன்ற விடயங்களில் கவனக் குவிவு கொண்டதாக அமைய வேண்டும்.
- **நடத்தைக் கோவை:** இலங்கையின் அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவினால் இலகுபடுத்தப்பட்டு அமுல்படுத்தப்படும், சிறந்த நடவடிக்கைகளைக் கொண்ட, சாத்தியமான வன்முறைகளைத் தடுக்க உதவுகின்ற அத்துடன் தவறான தகவல்கள், பிழையான தகவல்கள் மற்றும் வெறுப்புப் பேச்சு என்பவற்றின் பரவலைத் தடுக்க உதவுகின்ற பல தரப்பு நடைமுறைக் கோவை ஒன்றினைப் பின்பற்ற தன்னார்வமாக ஒத்துக் கொள்ள வேண்டும்.

**தேர்தல் சூழமைவு**

ஆசியாவின் மிகவும் பழைய ஜனநாயகமான இலங்கையானது நம்பகத்தன்மை வாய்ந்த தேர்தல் மற்றும் அரசியல் தொடர் செயன்முறைகளை நடத்துகின்ற உறுதிமிக்க பாரம்பரியத்தைக் கொண்டதாகும். 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு பலம், நேர்மை மற்றும் சுயாதீனம் என்பனவற்றை வழங்கியுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவினை பங்குதாரர்கள் பொதுவாக மிகவும் மதிப்புக்குரிய அமைப்பாகக் கருதுகின்றனர். அரசியல் செல்வாக்கில் இருந்து பொலிசாரின் சுயாதீனமானது அரசியலமைப்பு

நடவடிக்கைகளின் ஊடாக வலுப்படுத்தப்பட்டுள்ளது; இராணுவமானது தேர்தல் பாதுகாப்பில் வகிபாகம் ஒன்றினைக் கொண்டிருப்பதில்லை. தேர்தல்கள் வழமையாக சிறப்பாக இடம் பெறல் அத்துடன் தேர்தல் நிருவாகம் ஆழமாக நிறுவனமயமாக்கப்பட்டிருப்பதை உறுதி செய்யும் வகையில் இலங்கை சிவில் சேவை மற்றும் பொலிஸ் என்பனவற்றின் பிரதிநிதிகளுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளின் இயக்கவியல் விரைவாக மாற்றமடைகின்றது அத்துடன் இவ்வருட தேர்தலானது முன்னைய தேர்தல்களை விட போட்டித்தன்மை மிக்கதாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அசாதாரண கட்சி நிலைககைளைக் கருத்திற்கொண்டு, ஒற்றை அரசியல் கட்சி ஒன்று முதலாம் சுற்று வாக்கு எண்ணிக்கையில் திடமான பெரும்பான்மையைப் பெறுவது கடந்த காலங்களை விட இம்முறை மிகவும் கடினமானதாகக் காணப்படும் என தேர்தல் வல்லுனர்கள் எதிர்வு கூறுகின்றனர். இந்நிலை, வெற்றி பெறும் வேட்பாளரைத் தீர்மானிப்பதற்கு இலங்கையின் விருப்பு வாக்கு முறைமையின் கீழ் வாக்காளர்களின் இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பத் தெரிவுகளை எண்ண வேண்டிய நிலையை ஏற்படுத்தும். விசேடமாக தனியாரின் உடைமையாகக் காணப்படும் ஊடகங்கள் இடையே காணப்படும் பக்கச் சார்பான ஊடகச் சூழல் வாக்காளர்களுக்கு விருப்பமான வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கு அவசியமான பக்கச்சார்பற்ற தகவல்கள் கிடைக்கப்பெறுவதை தடுக்கலாம். பெருகிக் காணப்படும் சமூக வலைதளத்துடன் இணைந்து பக்கச்சார்பான ஊடகங்கள் தனிப்பட்ட வேட்பாளர்கள் அல்லது பாதிப்புறும் நிலைகொண்ட குழுக்களுக்கு எதிராக தவறான தகவல்கள், பிழையான தகவல்கள் மற்றும் வெறுப்புப் பேச்சு என்பனவற்றைப் பரப்பலாம். இதற்கு மேலதிகமாக, இடம்பெறச் சாத்தியமான பொதுவளங்களின் துஷ்பிரயோகம் குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கு அநீதியான அனுகூலங்களை வழங்குவதோடு தொடர் செயன்முறையில் உள்ள நம்பிக்கையையும் குறைக்கும்.

இலங்கையில் சிவில் யுத்தம் முடிவடைந்து பத்து ஆண்டுகளின் பின்னர், கடந்த ஏப்ரல் 21, 2019 அன்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் மூலம் நாட்டின் சமாதானத்தின் மீது பாரிய தாக்குதல் தொடுக்கப்பட்டது. பாதுகாப்பு தொடர்பில் உயர்ந்து காணப்படும் கரிசனைகள் ஜனாதிபதித் தேர்தலின் பொழுது பயத்தை அடிப்படையாகக் கொண்ட மற்றும் பிரிவினைமிக்க பிரச்சாரப் பேச்சுக்கள், குறிப்பாக முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படலாம். பாரம்பரிய மற்றும் சமூக வலைதளங்களாவன சமூகங்களுக்கு இடையில் பதட்டங்களை ஏற்படுத்தாத வகையில் அதிகரிக்கப்பட்ட கண்காணிப்பின் கீழ் காணப்படும். அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் வாக்காளர்களுடன் ஈடுபாடுகளை கொண்டிருக்கும் வேளை ஆக்கபூர்வமான அல்லது அழிவுபூர்வமான தகவல்களின் சாத்தியம் மிக்க வழங்குனர்களாகக் காணப்படுவர். இதற்கு மேலதிகமாக, தேர்தல் அதிகாரிகள் மற்றும் குடிமக்கள் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது மிகவும் கண்டிப்பான பக்கச்சார்பின்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## பிரதான அவதானிப்புகள்

### தேர்தல் நிருவாகம்

கடந்த 2015 ஆம் ஆண்டின் தேர்தலின் பின்னர் பாரிய சீர்திருத்தங்களின் பகுதியாகக் கொண்டுவரப்பட்ட இலங்கை அரசியலமைப்பு மீதான 19வது திருத்தம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஒன்றினை உருவாக்கியது. பொதுவாக, இத்தூதுக்குழுவைச் சந்தித்த உள்ளூர் பங்குதாரர்கள், தேர்தல் ஆணைக்குழுவானது நம்பகத்தன்மை கொண்ட தேர்தல்களை நடாத்துவதற்கு இயலுமை கொண்டது என்ற கருத்தினைக் கொண்டிருந்தனர். தேர்தல் பட்டியல் (வாக்காளர் பட்டியல்) தொடர்பில் உயர் மட்ட நம்பிக்கையும் காணப்பட்டது. வருடாந்த வாக்காளர் பதிவு தொடர் செயன்முறை ஒட்டுமொத்தமாக வினைத்திறன் மிக்கதாகக் காணப்பட்ட போதிலும் பெண்கள், திருநங்கைத் தனிநபர்கள் மற்றும் இயலாமை கொண்ட நபர்கள் போன்றோர் அதனை அணுகுவதில் சில சவால்கள் இன்னும் காணப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக, தேர்தல் தினத்தன்று 18 வயதை அடையும் கிட்டத்தட்ட 180,000 பேர் அவர்கள் பதிவு செய்வதற்கான இறுதித் தினமான மே 31, 2018 இற்கு பின்னர் உரிய வயதை அடைந்ததால் வாக்களிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

1978 ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக தேர்தலின் முடிவில் வாக்காளர்களின் இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பத் தெரிவு வாக்குகள் தாக்கம் செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது என்ற கருத்து சிலரிடம் காணப்பட்டது. எவ்வாறாயினும் விருப்பத் தெரிவு வாக்களிப்பு முறை, விசேடமாக எவ்வாறு இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பத் தெரிவு வாக்குகள் எண்ணப்படும் என்பது, பற்றிய புரிதல் குறைவான மட்டத்தில் காணப்படுவதை

தூதுக்குழு அவதானித்தது. இது வாக்காளர் அறிவில் தெளிவாகக் காணப்படும் இடைவெளியாக அமைந்திருப்பதுடன் அது நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பை ஏற்படுத்தும். அல்லது எவ்வாறு வெற்றி பெறும் வேட்பாளரைத் தீர்மானிக்க விருப்பத் தெரிவு வாக்குகள் ஒதுக்கப்படும் என வாக்காளர்கள் நன்கு அறிந்திருக்காவிடின் அது தேர்தலுக்கு பின்னரான அமைதியின்மையை ஏற்படுத்தும் சாத்தியம் கொண்டதாகக் காணப்படுகின்றது. தேர்தல் சட்ட வடிவமைப்பானது தேர்தல் ஆணைக்குழுவுக்கு அரச அமைப்புகள் மற்றும் அரச பணியாளர்களின் பணிகளை வழிநடத்தும் அதிகாரத்தை வழங்குகின்றது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவானது ஊடகங்களுக்கான வழிகாட்டல்களை வழங்கியுள்ளது அத்துடன் அரசியல் இலாபம் பெறும் நோக்கில் பொது வளங்களைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான வழிகாட்டல்கள் அரச பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. முன்னதாக இடம்பெற்ற தேர்தல்களைப் போன்று, தேர்தல் ஆணைக்குழு வாக்களிப்பு முடிவடைவதற்கு முன்னதாக உள்ள 48 மணித்தியாலங்களுக்கு பிரச்சாரத்தை நிறுத்துதல் மற்றும் ஏனைய தேர்தல் அதிகார சபைகள் மீதான அமைதிக் காலப்பகுதி ஒன்றினை அமுல்படுத்தவுள்ளது. தபால் மூல வாக்களிப்பு பொலிஸ், இராணுவம் மற்றும் சிவில் சேவையாளர்கள் உள்ளிட்ட அரச பணியாளர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் வெளியே வாக்களித்தல் மற்றும் பதிலாள் வாக்களித்தல் (Proxy voting) என்பன அனுமதிக்கப்படாமையினால் சமகாலத்தில் வெளிநாடுகளில் வாழும் இரண்டு மில்லியன் பணியாளர்கள் தமது வாக்குரிமையை இழந்துள்ளனர். வாக்களிக்க விரும்பும் புலம் பெயர் சமூக உறுப்பினர்கள் வாக்காளர் பதிவுக்கான வரண்முறைக்கு உட்பட்டவராக இருப்பதுடன் வாக்களிப்பு தினத்தில் நாட்டில் இருக்க வேண்டும்.

**ஊடகங்கள் மற்றும் தகவல் சூழல்**

பொதுவாக, பிரதான நீரோட்ட ஊடகங்கள் உள்ளிட்ட தனியார் ஊடகங்கள் மிகவும் பக்கச்சார்பு கொண்டனவாக, அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு ஆதரவு வழங்குவனவாக, சில வேளைகளில் தவறான மற்றும் பிழையான தகவல்களின் மூலங்களாக செயற்படுவதாக தூதுக்குழுவுக்கு விபரிக்கப்பட்டுள்ளது. இது குடிமக்கள் தமக்கு விருப்பமான வேட்பாளரைத் தெரிவு செய்வதில் மிகவும் தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பைக் குறைக்கின்றது. தனியார் ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் அரசியல் உயர்தரப்புகளின் சார்பாகக் காணப்படுவதுடன் ஊடகச் சூழல் மிகவும் முனைவாக்கம் மிக்கதாகக் காணப்படுகின்றது.

தேர்தல் ஆணைக்குழவானது தனியார் உரிமை ஊடகங்கள் மீது எந்த வித அதிகாரங்களைக் கொண்டிராத போதும் தேர்தல் காலப்பகுதியில் அரச ஊடகங்களின் மீதான முழுக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. சில பங்குதாரர்கள் இதனை அரச ஊடகங்களில் பக்கச்சார்பற்ற மற்றும் சமமான ஊடகப் பிரசித்தத்தை உறுதி செய்வதற்கான வழியாகக் காண்கின்றனர். ஏனையோர் தேர்தல் ஆணைக்குழு அரச ஊடகங்கள் மீது கொண்டுள்ள இவ்வதிகாரம் வெறுப்புப் பேச்சை மட்டுப்படுத்த அல்லது தவறான மற்றும் பிழையான தகவல்களின் பரவலைத் தடுப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டனர்.

ஊடகவியலாளர் குழுக்கள் உள்ளிட்ட பல சிவில் சமூக நிறுவனங்கள் இலங்கையின் தேசிய தொலைக்காட்சி வலையமைப்பான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபணம் (SLRC) ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஊடக அமைச்சில் இருந்து பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றப்பட்டமை தொடர்பில் தமது கரிசனைகளை வெளியிட்டனர். இணைய ஊடுருவல் மற்றும் சமூக வலைதளங்கள் என்பன வரலாற்றுக் கதைகள் மற்றும் அரசியல் விவாதங்களை ஏற்படுத்துவனவாகக் காணப்படும் அதேவேளை பாரம்பரிய ஊடகங்களால் மேற்கொள்ளப்படும் தொலைக்காட்சி ஒளிபரப்பு பொதுமக்கள் தொடர்பாடலுக்கான மிகவும் முக்கியமான ஊடகமாகக் காணப்படுகின்றது. இதனைக் கருத்திற்கொள்ளும் பொழுது மேற்குறிப்பிடப்பட்ட SLRC அமைச்சு மாற்ற செயற்பாடானது நடுநிலையான ஒளிபரப்பு மற்றும் அனைத்து அரசியல் குழுக்களுக்கும் சமமான அணுகல் என்பவற்றுக்கு சிறந்த விடயம் என எதிர்வு கூற முடியாது. அண்மையில் முஸ்லிம் சமூகங்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டுவதற்கு முகநூல் பயன்படுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டுக்கு மத்தியில பாரம்பரிய மற்றும் சமூக வலைதளங்கள் இனப் பதட்டங்களை பெருப்பிக்காமல் இருக்கும் வகையில் அதிகரித்த கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும். எவ்வாறாயினும் குடியியல் செயற்பாட்டாளர்கள் அண்மைய இணைய மற்றும் சமூக வலைதள முடக்கங்கள் தமது தொடர்பாடும் இயலுமை மற்றும் தமது சொந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவற்றுக்கு தடைகளை ஏற்படுத்தியதாகத் தெரிவித்தனர்.

முதலாவது விருப்பத் தெரிவு எண்ணிக்கையின் பொழுது எந்த ஒரு வேட்பாளரும் திடமான பெரும்பான்மையை பெற முடியாத சாத்தியம் காணப்படும் நிலையில், சில பங்குதாரர்கள்

தேர்தல் ஆணைக்குழு பக்கச் சார்பற்ற வாக்காளர் அறிவிச் செய்திகளை, இது விருப்பத் தெரிவு முறையுடன் தொடர்புடையதாகக் காணப்படுவதால் குறிப்பாக வாக்களிக்கும் முறை பற்றி, அரச ஊடகங்களில் பரந்த அளவில் ஒளிபரப்ப வேண்டும் எனக் குறிப்பிட்டனர்.

**பாதுகாப்பு மற்றும் தேர்தல் வன்முறை**

இலங்கையின் பொலிஸ் துறை நாட்டின் தேர்தல் செயன்முறையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பானது. அரசியல் செல்வாக்கில் இருந்து பொலிஸ் துறையின் சுயாதீனமானது அரசியலமைப்பு நடவடிக்கைகள் மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளது, அத்துடன் தேசிய மட்டத்தில் பொலிஸ் துறையானது பொதுவாக நடுநிலையானதாக அல்லது பக்கச்சார்பற்றதாக நோக்கப்படுவதாக பங்குதாரர்கள் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும் தேர்தல் பாதுகாப்பை நிருவகித்தல் மற்றும் தேர்தல் வன்முறைகளுக்கு பதில் நடவடிக்கை எடுத்தல் என்பவற்றில் உள்ளூர் மட்ட அதிகாரிகளின் வகிபாகம் தொடர்பில் கரிசனைகள் வெளியிடப்பட்டன. தேர்தலுக்கு முன்னரான வன்முறை முக்கியத்துவம் மிக்க கரிசனையாக சுட்டிக்காட்டப்படவில்லை, எனினும் சிலர் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களின் வாக்களிப்பை தடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படக்கூடிய மிரட்டல்கள் தொடர்பில் கவலை கொண்டிருந்தனர். எவ்வாறாயினும் தேர்தல் நடத்தை மற்றும் தோற்கும் வேட்பாளர் மற்றும் அவரின் தீவிர செயற்பாட்டாளர்களின் நடத்தைக்கு ஏற்ப சாத்தியமான தேர்தலுக்கு பின்னரான வன்முறை தொடர்பான கரிசனை உயர் மட்டம் ஒன்றில் காணப்பட்டது. விருப்பு வாக்கு முறைமையின் இயக்கவியல் பற்றிய புரிதல் வாக்காளர்கள் இடையே குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை தேர்தல் வன்முறையை ஏற்படுத்தும் சாத்தியம் மிக்க விடயமாகக் குறிப்பிடப்பட்டது.

**பிரச்சார நிதி**

இலங்கையில் சம காலத்தில் பிரச்சார நிதியைக் கட்டுப்படுத்தும் சட்டங்களோ பிரச்சாரச் செலவுகளைக் கண்காணிக்கும் அரச பொறிமுறைகளோ காணப்படவில்லை. பிரத்தியேகமாக, வேட்பாளர்கள் தமது பிரச்சாரப் பங்களிப்புகள் அல்லது செலவுகளை அறிக்கையிடுவதை அவசியமாக்கும் சட்டவாக்கங்கள் எவையும் காணப்படவில்லை. இது தேர்தலின் ஒட்டுமொத்த வெளிப்படைத்தன்மையினை குறைப்பதுடன் கேள்விக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் விருப்புகளின் முரண்பாடுகள் என்பனவற்றைத் தெளிவற்றதாக ஆக்குகின்றது. மேலதிகமாக, வேட்பாளர்கள் தமது பிரச்சாரங்களை முன்னெடுக்க துறைசார் வலையமைப்புகளுக்கு தமது சொந்த நிதியினை வழங்க வேண்டியுள்ளது. இது நிதிக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலைக் கொண்டுள்ள பெண்கள், இளைஞர்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் பங்குபற்றலுக்கு முக்கியமான தடையாகக் காணப்படுகின்றது. அத்துடன் இந்நிலை வெளிநாட்டு மூலங்கள் மற்றும் அரச வளங்களின் துஷ்பிரயோகம் உள்ளிட்ட சட்ட விரோத நிதி வகைகளுக்கான வழியை ஏற்படுத்துகின்றது. தேர்தல் ஆணைக்குழு தற்பொழுது வேட்பாளர்களின் சொத்து மற்றும் பொறுப்பு வெளிப்படுத்தல்களை சேகரித்து வருகின்றது. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் (RTI) அண்மைய தீர்ப்பு ஒன்றில் இவ்வெளிப்படுத்தல்கள் RTI இன் ஆளுகைக்கு உட்பட்டது எனவும் மக்கள் கோரும் பட்சத்தில் அவை வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. வெளிப்படைத்தன்மையின் நலன் கருதி இந்த சொத்து மற்றும் பொறுப்பு வெளிப்படுத்தல்கள் பொதுமக்களுக்கு கிடைக்கும்படி செய்யப்பட வேண்டும் என்ற யோசனையையும் தூதுக்குழு செவிமடுத்தது. ஏனைய சட்டவாக்கங்கள் தேர்தல் ஆணைக்குழு அல்லது தனி நபர் குடிமக்கள் இவ்வெளிப்படுத்தல்களை பிரசித்தமாக்கலைத் தடுத்தபோதும் வேட்பாளர்கள் அவற்றை பிரசித்தப்படுத்துவதற்கு எந்தவித தடையும் இல்லை என்பது தூதுக்குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

**அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள்**

1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட்ட பின்னர் இதுவரை நாட்டின் முக்கிய தலைவர்கள் -- ஜனாதிபதி, பிரதமர் அல்லது எதிர்க்கட்சித் தலைவர் எவரும் வேட்பாளராகப் பிரேரிக்கப்படாத தேர்தலாக இத்தேர்தல் அமைந்துள்ளது. இரண்டு முக்கியமான வேட்பாளர்கள் காணப்பட்டு வெற்றி பெற்றவர் திடமான பெரும்பான்மையை முதலாம் விருப்பத் தெரிவு வாக்குகளின் மூலம் பெற்றுக் கொண்ட முன்னைய தேர்தல்களைப் போல் அல்லாது இந்த தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற முடியாது எனப் பலரும் எதிர்பார்க்கின்றனர், இந்நிலை இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பத் தெரிவு வாக்குகளை எண்ண வேண்டிய நிலையை ஏற்படுத்தும்.

ஊலகளாவிய ரீதியில் அத்துடன் விசேடமாக தேர்தல் பதட்டங்கள் மற்றும் வன்முறைகளின் உயர் அபாய நேரிடர் நிலவும் சூழ்நிலைகளில், உள்நாட்டு அமைப்புகள் அத்துடன் NDI மற்றும் IRI போன்ற சர்வதேச நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு கொள்கை அடிப்படையில் அமைந்த மற்றும் கௌரவம்மிக்க பிரச்சாரங்களை நடத்துதல் அத்துடன் தவறான தகவல்கள், பிழையான தகவல்கள் மற்றும் வெறுப்புப் பேச்சு என்பவற்றின் பரவலைத் தடுத்தல் போன்ற விடயங்களில் கடப்பாட்டைக் கொண்டிருக்கும் நடத்தைக் கோவைகளை உருவாக்க உதவியுள்ளன. இலங்கையில் தனிப்பட்ட கட்சிகள் அமுல்படுத்துவதற்கு சிரமமான நடத்தைக் கோவைகளைக் கொண்டுள்ளன, எனினும் அவை இத்தேர்தலுக்காக பல கட்சி நடத்தைக் கோவை ஒன்றுக்கான உடன்பாட்டை இன்னும் எட்டவில்லை. தேர்தலுக்கு முன்னரான சூழலில் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்யும் உயர் சாத்தியம் காணப்படுவதாக சில பங்குதாரர்கள் குறிப்பிட்டனர். அவ்வாறான துஷ்பிரயோகங்கள் போக்குவரத்துக்கான அரச மானியம், பொருட்கள் மற்றும் ஏனைய பொருட் பங்களிப்புகள் உள்ளிட்ட பல வடிவங்களில் காணப்படக் கூடும்.

**பெண்களை உள்வாங்குதல்**
இலங்கையானது முதல் பெண் அரச தலைவரைத் தேர்ந்தெடுத்த பெருமைக்கான உரிமையைக் கொண்ட நாடாகும்[3]. எவ்வாறாயினும், பாராளுமன்றத்தில் பெண்களின் சதவீதம் மிகவும் குறைந்த 5.7 என்ற அளவில் காணப்படுகின்றது (225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 13 பேர்), அத்துடன் அமைச்சரவை மற்றும் ஏனைய நியமிக்கப்பட்ட அரசியல் தலைமைத்துவ வகிபாகங்களில் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. இலங்கை கடந்த 2018 ஆம் ஆண்டு இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் பெண்களுக்கான 25% இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்திய போதும் அதையொத்த இட ஒதுக்கீடுகளை மாகாண அல்லது தேசிய மட்டங்களில் அறிமுகப்படுத்தும் எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

நிலைபெற்ற அரசியல் குடும்பங்களுடன் தொடர்பற்ற பெண்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு; உயர் பிரச்சாரச் செலவு, இணையவழி மற்றும் நேரடியாக எதிர்கொள்ளும் வழமையான வன்முறை மற்றும் பாகுபாடு அத்துடன் அரசியலில் அவர்கள் வினைத்திறன் மிக்க தலைமைத்துவம் வழங்குவது தொடர்பில் வேரூன்றிக் காணப்படும் இகழ்ச்சிகள் மற்றும் முற்கற்பிதமாக்கம் உள்ளிட்ட பல தடைகளை எதிர்நோக்குகின்றனர். அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை மேற்கொள்பவர்களாக அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், கட்சி சகபாடிகள், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். தேர்தலில் போட்டியிடும் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளை தெளிவான குற்றங்களாக்கும் அல்லது அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் எந்த ஒரு சட்டமும் காணப்படவில்லை. சட்டத்தின் சட்டவடிவமைப்பில் வழங்கப்பட்டுள்ள தடைகள் வினைத்திறன் மிக்க அமுலாக்கம் கொண்டனவாகக் காணப்படவில்லை. குறிப்பாக, இளம் பெண்கள் தமது வயது மற்றும் பால்நிலையுடன் இணைக்கப்பட்ட சவால்களை எதிர்நோக்குகின்றனர். அதே நேரத்தில் அரசியலில் உள்ள முஸ்லிம் பெண்கள், சிவில் சமூகம் மற்றும் வர்த்தகங்கள் அத்துடன் சில முஸ்லிம் ஆண்கள் முஸ்லிம் பெண்களின் அரசியல் பங்கேற்பு மற்றும் தலைமைத்துவம் என்பவற்றுக்காக உயிர்ப்புடன் பணி புரிகின்றனர்.

**ஓரங்கட்டப்பட்ட குழுக்களை உள்வாங்குதல்**
தூதுக்குழு மற்றும் உள்ளடக்கல் மதிப்பீட்டு அணி சந்தித்த ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் இடையே தேர்தலானது பிரமுகர்கள் மேலும் வேரூன்றுவதற்காகக் காணப்படும் ஒரு பொறிமுறை என்ற உணர்வு அதிகரிப்பதை காணமுடிகின்றது. இவ்வுணர்வு ஓரங்கட்டப்பட்ட சமூகங்களின் தேர்தல் மற்றும் அரசியல் பங்களிப்பின் மீது காணப்படும் தடையினை மேலும் அதிகரிக்கின்றது. செலவு செய்தல் வரம்புகள் உள்ளிட்ட பிரச்சார நிதி மீதான கட்டுப்பாடுகள் இல்லாத நிலை கட்சி கட்டமைப்புகளுக்கு வெளியே உள்ள வேட்பாளர்களுக்கு, விசேடமாக பெண்கள், சிறுபான்மைகள் மற்றும் உயர் தரப்புகளின் அங்கமல்லாத இளைஞர்கள் போன்றோருக்கு, அதி உயர் நிதித் தடைகளை ஏற்படுத்துகின்றது.

*இன மற்றும் மதச் சிறுபான்மைகள்*

[3] Sirimavo Bandaranaike became the world’s first female head of government when she was elected as Prime Minister of Sri Lanka in 1960.

கடந்த தேர்தல்களை விட இத்தேர்தலில் அரசியல் கட்சி ஒன்று தமது சொந்த ஆதரவுப் பலத்தின் மூலம் மாத்திரம் தேர்தலை தனியாக வெற்றி கொள்வதற்கான திடமான பெரும்பான்மையைப் பெறுவது மிகவும் கடினமான விடயமாக அமையலாம். எனவே சிறுபான்மை வாக்காளர்களைக் கவருவதற்கு திடமான அரசியல் சலுகைகள் காணப்படும். எவ்வாறாயினும் சிறுபான்மைச் சமூகங்கள் சிவில் யுத்தம் முடிவடைந்ததில் இருந்து மாற்றம் மற்றும் சீர்திருத்தம் என்பவற்றுக்கான தமது எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாமையினால் பாரிய ஏமாற்றம் மற்றும் மனக்கசப்பு என்பவற்றை வெளியிடுகின்றன. இந்நிலை தமிழ் சமூகங்களின் இடையே தீவிரமாகக் காணப்படுவதுடன் அது இத்தேர்தலில் அவர்களின் பங்களிப்பை குறைக்கக் கூடும்.

சிறுபான்மைகள் பொதுவாக வாக்கை பதிவு செய்வதற்கு மற்றும் தமது வாக்கை அளிப்பதற்கு வாக்களிக்கும் இடங்களை அணுகுவதற்கு பொருத்தமான ஆவணங்களின் அணுகலைக் கொண்டுள்ளன. எவ்வாறாயினும் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்குகளை ஒடுக்குவதற்கு, குறிப்பாக சிங்களப் பெரும்பான்மைப் பகுதிகளில் அமைந்துள்ள முஸ்லிம் கிராமங்களில் அவர்களின் வாக்களிப்பை ஒடுக்குவதற்கு மிரட்டல், வன்முறை மற்றும் அரச வளங்களின் துஷ்பிரயோகம் என்பன இடம் பெறலாம் என சில பங்குதாரர்கள் குறிப்பிட்டனர். சில மத – தேசியவாத அமைப்புகள் முஸ்லிம்கள் வாக்களிப்பதைத் தடுக்கும் நோக்கில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக இலக்கு வைக்கப்பட்ட வன்முறைகளில் ஈடுபடக்கூடும் என்ற பயமும் சிறிதளவில் காணப்படுகின்றது.

*இளைஞர்கள்*

கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க தகுதியற்றவர்களாகக் காணப்பட்ட பல இலங்கையர்கள் நவம்பர் 16 அன்று 18 வயதை அடைகின்றனர். கிட்டத்தட்ட 180,000 பேர் கடந்த 2018 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதற்கான இறுதித் தினத்தின் பின்னர் வாக்களிப்பதற்கான வயதை அடைந்துள்ளனர். இந்த 2018 ஆம் ஆண்டைய வாக்காளர் இடாப்பே இவ்வருட தேர்தல் தொடர் செயன்முறைக்கு பயன்படுத்தப்படவுள்ளது. இளைஞர்கள் இந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உற்சாகம் மிக்கவர்களாகக் காணப்படவில்லை என்ற கண்ணோட்டம் சிலரிடம் காணப்படுகின்றது. தாம் அரசியல் கட்சிகளால் புறக்கணிக்கப்படுவதாக அல்லது குறித்த பிரதேசம் ஒன்றில் அல்லது குறிப்பிட்ட சிறுபான்மையினர் இடையே கட்சியின் நிலையைப் பலப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக மாத்திரம் பயன்படுத்தப்படுவதாக இளைஞர்கள் உணர்கின்றனர், இது இளைஞர்கள் இடையே அக்கறையின்மை மற்றும் குறைந்த வாக்குப் பதிவு என்பனவற்றை ஏற்படுத்தும். இலங்கை இளைஞர்கள் அரசியல் ரீதியான ஒட்டுமொத்தமாக ஒன்றினைவதற்கு சில வாய்ப்புகள் காணப்படுகின்றன. கட்சிகள் மற்றும் இயக்கங்களின் தலைமைத்துவ பதவிநிலைகளை அடைவதில் அவர்கள் குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்நோக்குகின்றனர். அவர்கள் அனுபவமற்றவர்கள் என்ற கண்ணோட்டம், அரசியல் கட்சிகளின் ஆதரவின்மை அத்துடன் அரசியலில் நுழைதல் மற்றும் பிரச்சாரங்களை நிதியிடுவதற்கு அதிக செலவு என்பன இதற்கான காரணங்களாகும்.

*இயலாமை கொண்ட நபர்கள்*

இயலாமை கொண்ட நபர்கள், கட்சி இயங்கு தளங்களில் வாக்காளர் அறிவு மற்றும் தகவல்களுக்கான குறைந்த அணுகல், வாக்களிப்பு நிலையங்களுக்கான போதிய பௌதீக அணுகல் இன்மை மற்றும் வாக்களித்தலை சுயாதீனமாக மற்றும் இரகசியமாக அளிக்கும் இயலுமை இன்மை உள்ளிட்ட பல தடைகளை வாக்களிப்பதில் எதிர்நோக்குகின்றனர். ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் கீழ் வாக்களிப்புக்கான உதவி மற்றும் இயலாமை கொண்ட நபர் ஒருவரை வாக்களிப்பு நிலையத்துக்கு கொண்டுவருவதை அனுமதிக்கும் போக்குவரத்து ஆகிய இரு வகை உதவிகள் வழங்கப்படுகின்றன. வாக்காளர் பட்டியலானது தற்பொழுது வாக்காளர்களின் விசேட உதவிகளுக்கான தேவைகள் மற்றும் வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, எனினும் அவற்றுக்கான அனுமதி பெறும் தொடர் செயன்முறையானது தொந்தரவுமிக்கதாகவும் குழப்பம் கொண்டதாகவும் காணப்படுகின்றது. தேர்தல் ஆணைக்குழுவானது தகவல் சேகரிப்பு ஒன்றின் மூலம் வாக்காளர்களுக்கு அவசியமான வசதிகளின் வகைகளை மதிப்பிட சில முயற்சிகளை மேற்கொண்டபோதும் ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்தும் வகையில் அதன் கண்டறிதல்கள் உரிய நேரத்தில் தயாராகவில்லை.

*ஆண் மற்றும் பெண் ஓரினச் சேர்க்கை, இருபாலியல் நிலை, திருநங்கை மற்றும் இடையிலிங்க (LGBTI) வாக்காளர்கள்*

LGBTI சமுதாய உறுப்பினர்கள் பரந்த சமூகப் பாகுபாட்டை எதிர்நோக்குகின்றனர், அது வாக்காளர்களாக, கட்சி செயற்பாட்டாளர்களாக மற்றும் வேட்பாளர்களாக பங்குபற்றும் அவர்களின் இயலுமையில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. சில அரசியல்வாதிகள் தமது எதிரிகளைத் தாக்க இழிவு மிக்க LGBTI பதப்பிரயோகங்களை ஒரு வழியாகப் பயன்படுத்துகின்றனர். திருநங்கைச் சமுதாயம் தேசிய அடையாள அட்டையில் தமது பால்நிலையை மாற்றுவதில் மேலதிக சவால்களை எதிர்நோக்குகின்றனர், அது பால்நிலை மாற்றம் பெற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் என்பவற்றுக்கான இயலுமையில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இதன் காரணமாக திருநங்கை சமுதாய உறுப்பினர்கள் தமது ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பால்நிலை அவர்களின் தோற்றத்துடன் ஒத்திராத நிலையில் வாக்களிக்க முற்பட்டால் அவர்கள் வாக்களிப்பு மோசடி மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்படும் அபாய நேரிடர் காணப்படுகின்றது. இந்த குறிப்பிடத்தக்க தடை அதிகமானவர்களை வாக்களிக்காமல் இருப்பதன்பால் செலுத்துகின்றது.

**குடிமக்கள் தேர்தல் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட சிவில் சமூகம்**

இலங்கையின் அரசியல் மற்றும் தேர்தல் தொடர் செயன்முறையில் குடியியல் செயற்பாட்டாளர்களின் ஈடுபாடு உயர் மட்டம் ஒன்றில் காணப்படுகின்றது. எதிர்வரும் நவம்பர் 16 ஜனாதிபதித் தேர்தலுக்காக குடியியல் குழுக்கள் வாக்காளர் அறிவு, ஊடகக் கண்காணிப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு என்பவற்றில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளன. சிவில் சமூக அமைப்புகள் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை குடிமக்களுடன் குறிப்பிட்ட கொள்கை முன்மொழிவுகள் அடிப்படையில் பிரச்சாரங்களை மேற்கொள்ள ஊக்குவிக்கின்றன. அதில் கடந்த ஒக்டோபர் 5 அன்று இடம் பெற்ற பல கட்சி வேட்பாளர் உரையாடலும் உள்ளடங்குகின்றது. குடிமக்கள் கண்காணிப்பு நிறுவனங்கள் நீண்ட கால மற்றும் குறகிய கால கண்காணிப்பாளர்களை வழங்கும் நோக்குடன் தேர்தல் கண்காணிப்புக்கு ஒத்துழைப்பு வளங்கவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளன.

**பரிந்துரைகள்**

தூதுக்குழுவானது பின்வரும் பரிந்துரைகளை எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் மற்றும் அதன் பின்னரான காலப்பகுதி என்பவற்றில் கருத்தில் கொள்வதற்காக வழங்குகின்றது.

**தேர்தல் ஆணைக்குழு**

- வாக்காளர் அறிவு முயற்சிகளின் பகுதியாக, இலங்கையின் விருப்பு வாக்கு முறையின் கீழ் அவர்களின் இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பத் தெரிவுகளைக் குறியிடல் உள்ளிட்ட வாக்களிப்பு தொடர் செயன்முறை பற்றிய அறிவை வாக்காளர்களுக்கு வழங்குதல்
- அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக குழுக்கள் விருப்பத் தெரிவு உள்ளிட் வாக்களிப்பு தொடர் செயன்முறை பற்றி வாக்காளர்களுக்கு கல்வி வழங்குவதை அனுமதிக்கும் நோக்கில் மாதிரி (specimen) வாக்குச் சீட்டுகளை நேரத்துடன் பிரசுரித்தல்.
- எந்த ஒரு வேட்பாளரும் முதலாவது விருப்பத் தெரிவு எண்ணிக்கையின் பொழுது திடமான பெரும்பான்மையை பெறும் சாத்தியம் மிகவும் குறைவாகக் காணப்படுவதால் தேர்தல் பணியாளர்கள் மற்றும் வாக்கெண்ணும் அதிகாரிகள் விருப்பத் தெரிவு வாக்களிப்பு முறையை நிருவகிப்பதற்கு போதிய அளவு பயிற்சி பெற்றிருப்பதை உறுதி செய்தல்.
- சட்டத்துக்கு ஏற்ப தமது பணியாளர்கள் வாக்குகளை அளிப்பதற்காக அவர்களது இடங்களுக்கு பயணிப்பதற்கான நேரத்தைப் வழங்க தொழில் தருனர்களை ஊக்குவித்தல்.
- வடக்கு, கிழக்கில் பிரச்சனைகள் எழச் சாத்தியமான இடங்கள் என அறியப்பட்ட, மற்றும் முக்கிய முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களில் வாக்களிப்புக்கான சம அணுகலை உறுதி செய்தல் அத்துடன் வன்முறை மற்றும் மிரட்டல் என்பனவற்றுக்கு விரைவான பதில் நடவடிக்கைகளை வழங்கும் நோக்கில் கண்காணிப்பாளர் அணிகளை அனுப்புதல் மேலும் தமிழ் பேசும் சமூகங்களுக்கு தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரிகளை அனுப்புவதை முன்னுரிமைப்படுத்தல்.

*பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பு*

- பெண்கள், இளைஞர்கள் மற்றும் கிராமப்புறங்களில் இலங்கையின் 70 சதவீதமான மக்களை இலக்கு வைத்து, ஒவ்வொரு குடிமகனினதும் வாக்கின் முக்கியத்துவம், தேர்தல் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகளின் அணுகல் மற்றும் இயலாமை கொண்ட மக்களுக்கான அணுகல் தன்மை மற்றும் வசதிகள் போன்ற விடயங்களில் கவனக் குவிவு கொண்ட வாக்காளர் அறிவுப் பிரச்சாரங்களை அதிகரித்தல்.
- பால்நிலை, இனம், மதம், பாலியல் நோக்குநிலை அல்லது அரசியல் இணைவுநிலை என்பவற்றுக்கு அப்பால் அனைத்து குடிமக்களுக்கும் பாதுகாப்பை வழங்குவதற்காக தேர்தல்களின் பாதுகாப்புக்காக கடமையாற்றும் பொலிஸார் துறைசார் நிலை மற்றும் பக்கச்சார்பு அற்ற நிலையில் இயங்குவதை உறுதி செய்யும் நோக்கில் பொலிஸ் அதிகாரிகளுக்கான வழிகாட்டல்களைப் பிரசுரித்தல்.
- சோதனைச் சாவடிகள் மற்றும் வாக்களிப்பு நிலையங்களில், விசேடமாக முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில், அதிகளவான பெண் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் தேர்தல் அதிகாரிகள் உள்வாங்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படுவதை முன்னுரிமைப்படுத்தல்.
- இயங்கு நிலை கொண்ட தேசிய இளைஞர் தலைமை தாங்கும் நிறுவனங்களுடன் உறவுகளை வலுப்படுத்துவதன் மூலம் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.

**ஊடகங்கள்**

- அரச மற்றும் தனியார் ஊடகங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும். விசேடமாக அனைத்து வேட்பாளர்களுக்கும் ஒழுக்கம் மிக்க, விகிதப்பங்கு முறையான மற்றும் பக்கச்சார்பற்ற ஊடகப் பிரசித்தம் வழங்குவது தொடர்பில் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும்.
- தேர்தல் ஆணைக்குழுவுடனான ஒருங்கிணைப்புடன் அரச ஊடகமானது வாக்காளர்களின் ஊடக அறிவை மேம்படுத்த, மற்றும் விருப்பத் தெரிவு வாக்களிப்பு உள்ளிட்ட வாக்களிப்பு முறை பற்றி மக்களுக்கு அறிவூட்ட பொதுச் சேவை அறிவுறுத்தல்களை பிரசுரிக்க மற்றும் ஒளிபரப்ப வேண்டும்
- நீண்ட கால நோக்கில் ஊடக நிறுவனங்கள் தேர்தல் தொடர் செயன்முறைகள் உள்ளிட்ட விடயங்களில் ஒழுக்கம் மிக்க அறிக்கையிடலுக்கு வழிகாட்ட மற்றும் அதனைக் கண்காணிக்க இணைந்த சுயாதீனமாக கண்காணிப்பு அலகு ஒன்றின் உருவாக்கத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.

**வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் வெறுப்புப் பேச்சுடன போரிடல் என்பவற்றுக்கான இணைந்த முயற்சிகள்**

- தேர்தல் ஆணைக்குழு, தேர்தல் கண்காணிப்பாளர் குழுக்கள் அத்துடன் மதங்கள் மற்றும் இனங்களின் இடையான உரையாடல்களில் ஈடுபடுவோர் உள்ளிட்ட சிவில் சமூகக் குழுக்கள் வன்முறைகள் எழும் சமிக்ஞைகளை அடையாளம் காண்பதற்காக தேர்தல் காலத்தை உயிர்ப்புடன் கண்காணிக்க வேண்டும்.
- அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் (இணையவழி உள்ளிட்ட) சமூக வலைதள இயங்கு தளங்களில் எழும் தவறான தகவல்கள், பிழையான தகவல்கள் மற்றும் வெறுப்புப் பேச்சு அத்துடன் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை கண்காணித்து அறிக்கையிடுவதற்கு தேர்தல் ஆணைக்குழு மற்றும் சிவில் சமூகம் என்பன ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.
- தமது இயங்கு தளங்களில் மேற்கொள்ளப்படும் வெறுப்புப் பேச்சுக்களை கண்டறிவதற்காக ஒருங்கிணைப்பு பொறிமுறைகளை உருவாக்குதல் அத்துடன் இலங்கை அதிகாரசபைகள், அரசியல் கட்சிகள் அல்லது குடியியல் நிறுவனங்களினால் அறிக்கையிடப்படும் தவறான தகவல்கள், பிழையான தகவல்கள் மற்றும் வெறுப்புப் பேச்சு என்பன தொடர்பில் விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன தொடர்பில் அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் சமூக வலைதள நிறுவனங்கள் இணைந்து பணியாற்ற வேண்டும்.

**அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள்**

- தேர்தல் தொடர் செயன்முறையின் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க மற்றும் குடிமக்கள் தகவலறிந்த வாக்களிப்பை மேற்கொள்ள ஜனாதிபதி வேட்பாளர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த சொத்து மற்றும் பொறுப்பு வெளிப்படுத்தல்களை பிரசித்தமாக வெளியிட வேண்டும்.
- இலங்கையின் அரசியல் கட்சிகள் பிராந்தியத்தின் நெறிமுறைகள் மற்றும் சிறந்த நடவடிக்கைகளுக்கு ஒப்பான அத்துடன் தவறான தகவல்கள், பிழையான தகவல்கள் மற்றும் வெறுப்புப் பேச்சு என்பவற்றின் பரவலைத் தடுக்க உதவும் பல கட்சி நடத்தைக் கோவை ஒன்று தொடர்பில் உடன்பாடு காண வேண்டும். கோவையில் பின்வருவன உள்ளடங்க முடியும்:
    a) இலங்கையின் அனைத்து குடிமக்களினதும் நலன்கள், கரிசனைகள் மற்றும் தேவைகளுக்கு பதிலளிக்கும் நோக்கில் மாற்றுக் கொள்கைகளை மேம்படுத்துவதற்கான கடப்பாடு அத்துடன் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் ஒப்புதலைக் கட்டி எழுப்புவதை ஊக்குவித்தல்
    b) பெண்கள், இளைஞர்கள், இன மற்றும் மதச் சிறுபான்மையினர், இயலாமை கொண்ட நபர்கள் மற்றும் LGBTI சமூகங்கள் என்பவற்றின் கருத்தாழமிக்க உள்ளடக்கலுக்காக கொள்கை உருவாக்கம், பிரதிநிதித்துவம் மற்றும் ஒன்று திரட்டுதல் என்பவற்றுக்கான பொறிமுறைகளை உருவாக்குதல்
    c) கட்சியின் துண்டுப் பிரசுரங்கள், செய்திக் கடிதங்கள், பதாதைகள், எந்த ஒரு ஊடகத்திலும் இடம்பெறும் அரசியல் ஒலி/ஒளிபரப்புகள் அத்துடன் அரசியல் பேரணிகளில் இடம் பெறும் பேச்சுக்களில் துஷ்பிரயோகம் மிக்க ஆத்திரமூட்டுகின்ற அல்லது பிரிவினையை ஏற்படுத்துகின்ற அல்லது எந்த ஒரு நபருக்கோ அல்லது நபர்களின் குழுக்களுக்கோ எதிராக எந்த வடிவத்திலும் வன்முறையைத் தூண்டுகின்ற மொழி வடிவம் காணப்படாமல் இருப்பதை உறுதி செய்தல்
    d) பக்கச் சார்பான நன்மையை பெறுவதற்காக அரச வளங்களைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கான கடப்பாடு; அத்துடன்
    e) நடத்தைக் கோவையின் மீறல்கள் உரிய நேரத்தில் வெளிப்படையாக தீர்க்கப்படுவதற்கான ஒரு பொறிமுறை.

**பாராளுமன்றம் (தேர்தலின் பின்னர்)**

- அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பங்களிப்புகள் மூலம் கிடைக்கும் நிதிகள் மற்றும் செலவீனங்களை கட்டுப்படுத்தும் பிரச்சார நிதியிடல் சட்டவாக்கங்களை ஏற்படுத்தவதன் மூலம் தேர்தல்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் உள்வாங்கும் தன்மை என்பவற்றை அதிகரித்தல்.
- பக்கச் சார்பான நன்மைகளைப் பெறும் நோக்கில் அரச வளங்களை தவறாக பயன்படுத்துவோரை பொறுப்புக்கூற வைக்கும் வகையில் சட்டத்தின் சட்டவடிவமைப்பை வலுப்படுத்தல்.
- தேர்தல் தினம் அல்லது அதற்கு முன்னர் 18 வயதை அடையும் குடிமக்கள் பதிவு செய்யப்படல் மற்றும் வாக்களித்தல் என்பவற்றை இயலுமாக்கல் அத்துடன் வெளிநாடுகளில் உள்ள இலங்கைக் குடிமக்கள் வாக்களிப்பதற்கான பொறிமுறைகளைக் கருத்தில் கொள்ளுதல்.

**சிவில் சமூகம்**

- இலக்கு வைக்கப்பட்ட வாக்காளர் அறிவிப் பிரச்சாரங்களை, குறிப்பாக விருப்பத் தெரிவு வாக்களிப்பு முறை, இயலாமை கொண்ட நபர்களுக்கான அணுகல்தன்மை மற்றும் வசதிகள் போன்ற விடயங்களில் நடத்துதல்.
- இயலாமை கொண்ட நபர்களின் அமைப்புகள் வாக்களிப்பு நிலையங்களில் காணப்படும் வசதிகளை விரிவாக்குதல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து பணி புரிதல். இதில் ஏற்கனவே காணப்படும் உதவிகளான போக்குவரத்து மற்றும் வாக்களிப்பு உதவி என்பவற்றைப் பெறுவதற்கான தொடர் செயன்முறை பிரதான நீரோட்ட மயமாக்கப்படல் வேண்டும். அத்துடன், குறித்த தொடர் செயன்முறை தெளிவானதாக, இலகுவானதாக உதவிகள் அவசியமான அனைத்து வாக்காளர்களுக்கும் உடனடியாக கிடைக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

- குடிமக்கள் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் பெண்கள் மற்றும் இளைஞர்களை கண்காணிப்பாளர்களாக உள்வாங்குவதை முன்னுரிமைப்படுத்த வேண்டும். இயலாமை கொண்ட நபர்கள் தேர்தல் கண்காணிப்பாளர்களாக செயற்படுவதை தொடர்ந்து முன்னெடுப்பதோடு இயலாமை கொண்ட கண்காணிப்பாளர்கள் எதிர்நோக்கும் ஏற்பாட்டியல் (Logistical) தடைகளை நீக்கி அவர்களுக்கு உதவும் நோக்கில் இயலாமை கொண்ட நபர்களுக்கான நிறுவனங்களுடன் ஈடுபாடுகளை ஏற்படுத்த வேண்டும்.
- தேர்தல் அதிகாரசபைகள் திருநங்கைகள் எதிர்கொள்ளும் தடைகள் பற்றி, குறிப்பாக அவர்களின் தேசிய அடையாள அட்டைகளில் பிரதிபலிக்கப்படும் பால்நிலை தொடர்பில், கூருணர்வாக்கத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**சர்வதேச சமூகம்**

- ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கும் உள்ளூர் மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்களுக்கு முழுமையான ஆதரவு வழங்குதல்
- கடந்த தேர்தல்களில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுடன் பின் தொடரலில் ஈடுபடல், உள்வாங்கலை அதிகரிக்கும் சட்டங்களை கடுமையான அமுலாக்கம், தொடர் செயன்முறையின் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றில் கவனக் குவிவைக் கொண்டிருத்தல்.

-----------

*IRI மற்றும் NDI என்பன உலகளாவிய ரீதியில் குடிமக்கள் பங்கேற்பு, திறந்த தன்மை மற்றும் அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் என்பவற்றின் ஊடாக ஜனநாயக அமைப்புகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் அவற்றை வலுவூட்டல் என்பனவற்றில் அர்ப்பணிப்பு கொண்ட இலாப நோக்கற்ற மற்றும் பக்கச்சார்பற்ற நிறுவனங்களாகும். IRI பற்றிய மேலதிக தகவல்களைப் பெற www.iri.org என்ற இணையத்தளத்தை நோக்கவும். NDI பற்றிய மேலதிகத் தகவல்களைப் பெற www.ndi.org என்ற இணையத்தளத்தை நோக்கவும்.*

*தூதுக்குழுவானது இந்தப் பணிக்கு ஆதரவு வழங்கியமைக்காக ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களத்துக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது*